1990 சனவரி 20]

ஆகவே அரிசனங்களாக அவர்களையும் கருதிக் கொண்டு தாட்கோ மூலமாக வீடு கட்டித் தரும் திட்டத்தை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி கடன் கொடுப்பது பற்றியது. தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கத் தயாராக இருக்கிறேன்.

குற்றாலம் நகரியக் குழு.

***2514.** திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

குற்றாலம் நகரியக் குழு அமைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

30-10-1987 நாளிட்ட ந. நி. ம. கு. வ. துறை, அரசாணை நிலை எண் 1045-ல் 12 அலுவலர்கள் மற்றும் 6 அலுவலரல்லாதவர் ஆகியோரை உறுப்பினர்களாக மூன்று ஆண்டுகளுக்கு நியமனம் செய்து குற்றால நகரியக் குழு அமைக்கப்பட்டது. அலுவலரல்லாத உறுப்பினர்களின் நியமனத்தை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு இடைக்காலத் தடை உத்தரவு பெறப்பட்டதால், அவர்கள் இதுவரை பதவி ஏற்கவில்லை. இதற்கிடையில் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட உத்தரவை திரும்பப் பெற்றுக் கொண்டு, புதிதாக உறுப்பினர்களை நியமனம் செய்ய இயலுமா என்பது குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது.

9-45 மணி

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் இந்தத் துறையின் அமைச்சராக இருந்தபோது கூட நான் இதை வலியுறுத்தி வந்தேன். இனி மேல் நீதிமன்றத்தில் இருக்கின்ற வழக்கு பிரயோசனம் இல்லை. புதிய குழுவை நியமனம் செய்ய வேண்டும் என்றுதான் அந்த வழக்கு போடப்பட்டிருக்கிறது. ஆகவே அதை உடனடியாகப் போட வேண்டும். 3, 4 வருடங்களாக குற்றாலம் நகரியம் இல்லாமல் தமிழ் நாட்டினுடைய ஒரு மிகப்பெரிய சுற்றுலா ஸ்தலம் ஒருவிதமான சீரமைப்புப் பணிகளும் இல்லாமல் நடந்து வருகிறது. ஆகவே அதை ஒரு காலவரம்பிற்கு உட்பட்டாவது அமைக்க முடியும் என்ற உறுதியை அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திற்கு தருவார்களா என்று நான் கேட்க ஆசைப் படுகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டத்துறை யோசனைப்படி உயர் நீதிமன்றத்தில் ஒரு மனு தாக்கல் செய்து இதுபோல் பழைய உறுப்பினர்களை நீக்கிவிட்டு புதியதாக முறைப்படி நியமனம் செய்தால் அது ஏற்றுக்கொள்ளப்படுமா என்று ஆராய்ந்து ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் நீதிமன்றத்தில் மனு கொடுக்கப்பட்டு அதற்கான உரிமை பெறப்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடத்தலுக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களை பறிமுதல் செய்யும் சட்டம்.

*1691. திரு. ஆலவயல் சுப்பையா :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நெல் கடத்தப் பயன்படுத்தப்படும் வாகனங்களைப் பறிமுதல் செய்ய அரசு சட்டம் கொண்டுவருமா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கள்ளக்கடத்தலில் ஈடுபடுகின்ற வாகனங்களைப் பறிமுதல் செய்வதற்கு 1955 ஆம் ஆண்டு இன்றியமையா சட்டத்தின்கீழ் வழியும், வகையும் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆலவயல் சுப்பையா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக மிக அவசியமான நெல் போன்ற உணவுப் பொருளை சில முதலாளிகள் வெளி மாநிலங்களுக்கு அரசு அனுமதி இல்லாமல் கடத்திச்சென்று அதிக விலைக்கு விற்க பயன்படுத்தப்படும் வாகனங்களைப் பறிமுதல் செய்ய அரசு கடுமையான சட்டம் கொண்டு வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 1955 ஆம் ஆண்டு இன்றியமையாச் சட்டம் இருக்கின்ற காரணத்தினாலே புதியதோர் சட்டம் கொண்டு வருவதற்கான அவசியமும், தேவையும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆலவயல் சுப்பையா : துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் சென்ற ஆண்டு நெல் கடத்தப்பட்ட வாகனங்கள் எண்ணிக்கை எத்தனை என்பதையும் அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.]